

மாநகரப் போக்குவரத்து கழகத்தின் தொழில்நுட்ப தொ.மு.ச. சேது இல்ல விழாவில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு வாழ்த்தினார். இதில் செல்வக்குமார், பிடிசி எஸ்.ரவி, பெரம்பூர் த.ஆறுமுகம், எம்.பெருமாள், ஏ. தங்கராஜ், மு. ஜோதி, மோகன்குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.



கும்மிடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஜெ.ஜெ.601 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில் கூட்டுறவுத்துறை மூலம் ஆறு மகளிர் சுய உதவிகுழுக்களுக்கு ரூபாய் 1 கோடியே 30 லட்சம் கடனுக்கான காசோலைகளை சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் ஜான் (எ) பொன்னுசாமி, சக்கரவர்த்தி, தில்லைகுமார், தேன்மொழி ஏழுமலை, அப்துல்ரஷீத், இரா.அறிவழகன், எம்.கேசவன், எஸ்.ராமஜெயம், கோல்டுமணி, விஜயன், பாபு, சித்ராபாபு, ராமராவ், ரகீம் எட்வர்ட், வெட்கடாத்திரி, சீனிவாசுலு, பி.கே.நாராயணசாமி, கோகுல், அருண், ராஜா, குப்பன், சீனு, மணி, ஸ்ரீராம், ஸ்ரீராமுலு, ரீட்டா, ரஞ்சித், தட்சினாமூர்த்தி, ரகு, யோவான்;, நளாயினி, ராஜகோபால், கோவிந்தராஜன், சஞ்சய், அரிகரன், கிரண், எஸ்.பாபு, கோட்டி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பேரூராட்சிகளில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முதல்வர் போதுமான நிதி ஒதுக்கீடு!

# 55 பேரூராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!


சென்னை, பிப்.25–

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள், "கடந்த ஐந்தாண்டு கால கழக அரசில் 55 பேரூராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.**

கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:–

**எம்.எச். ஜவாஹிருல்லா:** அய்யம்பேட்டை பேரூராட்சியானது மிகப் பெரிய ஒரு பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியைச் சுற்றி பல்வேறு சிறிய ஊர்கள் இருக்கின்றன. அந்த சிறிய ஊர்களிலிருந்து மக்கள் பேருந்து வசதிக்காக வேண்டி அய்யம்பேட்டைக்குத்தான் வரக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. தினசரி சுமார் 100 பேருந்துகளுக்குமேல் தஞ்சாவூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, சிதம்பரம், சென்னை என்று பல மாவட்டத் தலைநகரங்களுக்கும் இங்கிருந்து பேருந்துகள் செல்கின்றன. இந்த அய்யம்பேட்டையில் பேருந்து நிலையம் இல்லாதது மிகப்பெரிய ஒரு குறையாக இருக்கிறது. குறிப்பாக, அய்யம்பேட்டை தேர்வுநிலைப் பேரூராட்சிக்கு அரசுக்குச் சொந்தமான சூலமங்கலம் இரண்டாம் சேத்தி நில புல எண் 591/4. அந்த இடத்தினைப் பெற்று அய்யம்பேட்டை பேரூராட்சிக்கு ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் கே.என்.நேரு:** அய்யம்பேட்டை பேரூராட்சியில் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்குமானால், அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகப் பெற்று அதற்கான நிதியைத் தந்து நிச்சயமாக பேருந்து நிலையம் கட்டலாம். இப்போது ஆரம்பித்து வைத்தால், வருகின்ற காலத்தில் அதை முடிக்கக்கூடிய நிலையும். இப்போதே அந்தப் பணியை ஆரம்பித்து வைக்கிறோம். மேலும், நீங்கள் பார்த்தீர்களென்றால், தமிழ்நாட்டில் மொத்தம் 479 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதில் இப்போது 198 பேரூராட்சிகளில் மட்டும்தான் பேருந்து நிலையங்கள் இருக்கின்றன.



தற்போது இந்த ஐந்தாண்டு காலத்தில் மட்டும் 55 பேரூராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். எனவே, ஒவ்வொரு பேரூராட்சிகளிலும் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முதலமைச்சர் அவர்கள் போதுமான நிதியுதவியைச் செய்து தந்திருக்கிறார்கள். எனவே, நிதியைப் பற்றி பிரச்சினை இல்லை. இடம்தான் பிரச்சினையாக இருக்கிறது. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார். சுவாமிமலைக்கு அவர் இங்கே உங்கள் மூலமாக அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதை குத்தகைக்குப் பெற்று உடனே வேலை செய்வதற்குரிய அந்தப் பணியும் செய்யலாம். அய்யம்பேட்டை பேருந்து நிலையப் பணிகளையும் நிச்சயமாக செய்ய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோ. தளபதி:** மதுரை வடக்குத் தொகுதியிலே செல்லூர் கால்வாய்ப் பணி நடைபெற்று வருகிறது. அந்தக் கால்வாயினுடைய இருபுறமும் பாதுகாப்புச் சுவர் கட்டப்படுவதால் சாக்கடையிலே பாதாளச் சாக்கடையினுடைய கழிவுநீர் வெளியேறுவது தடுக்கப்படுகிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மாநகராட்சி அலுவலர்களிடம் சொல்லி இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டும்.

**திருமதி எஸ். தேன்மொழி:** நகராட்சி குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் சேவுகம்பட்டி பேரூராட்சியிலுள்ள திருநகரில், ஆயிரக்கணக்கான மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், அதேபோன்று பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில், காவல் நிலையம் பின்புறம் உள்ள 14 வது வார்டு பகுதியில், குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி SUMP அமைத்திட இந்த அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை கடந்த ஆண்டு என்னிடம் கேட்டார்கள்.

உடனடியாக துறையிடம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபோன்று புதிய தொட்டிகள் கட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவிட்டன. எனவே, விரைவில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கு. பிச்சாண்டி :** என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் இப்போது பேருந்து நிலையம் கட்டப்படுகிறது. அதற்கு இன்னும் இடம் அதிகம் இருப்பதால், அதனைப் பெரியதாகக் கட்டுவதற்கும், வேட்டவலம் பகுதியில் இப்போது BYPASS சாலை அமைக்கப்படுகிறது, வேட்டவலம் பேருந்து நிலையத்திற்கு அருகில் BYPASS சாலையில் அரசு நிலம் இருக்கிறது, அங்கே ஒரு புதிய பேருந்து நிலையம் கட்டித் தரப்படுமா?

**அமைச்சர் கே.என். நேரு:** ஏற்கெனவே பேருந்து நிலையம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். புதிய பேருந்து நிலையத்திற்கு அவசியம் ஏற்படுமானால், அங்கே இடம் இருக்கிறது என்ற காரணத்தால். அதனை விரிவுபடுத்தி அவருக்கு, ஏனென்றால் அவர் துணை சபாநாயகர் மட்டுமல்ல. 1989 ஆம் ஆண்டிலிருந்து எங்களோடு அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக, துணை சபாநாயகராக இருந்து கொண்டிருக்கிறார். அவரது கோரிக்கை நிச்சயமாக நம்முடைய முதல்வர் அவர்களிடம் சொல்லப்பட்டு, நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ந. தளவாய் சுந்தரம்:** நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு சிறிய கேள்விதான். கிட்டத்தட்ட 305 கடைகள் கன்னியாகுமரி பேரூராட்சியில் இருக்கின்றன. MUNICIPALITY சம்பந்தமாக ஒரு 142 கடைகள் இருக்கின்றன. HR&CEக்கு ஒரு 125 கடைகள் இருக்கின்றன. இந்தக் கடைகளுக்கெல்லாம், தற்போது கடைகளை EVICT செய்ய வேண்டுமென்று NOTICE அனுப்பப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில், ENCROACHMENT இருந்தால் மட்டும்தான் EVICT செய்யச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்து சமய அறநிலையத் துறையும், FIXATION OF RENTஐயும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 305 கடைகளுக்கும் NOTICE கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து அந்த NOTICEஐ நிறுத்தி, அங்கிருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு வாழ்வு தர வேண்டும்.

அந்த இடம் HR&CEக்கு சொந்தமான இடம். 1979 ACTக்குப் பிறகு அந்தக் கடை தரைக் கடையாக இருந்திருக்கிறது. இப்போது அதில் சிறிய கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அதற்கு PLAN APPROVAL இல்லையென்று NOTICE கொடுத்திருக்கிறார்கள்.

**அமைச்சர் கே.என்.நேரு:** உறுப்பினர் அவர்கள் சொல்வது குறித்து, எப்படி பாதிக்காத அளவிற்கு செய்யலாம் என்று நான் அதிகாரிகளுடன் கலந்து பேசுகிறேன். அதுவும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இங்கு இருக்கிறார். அதனால் பிரச்சினை இல்லை. அந்த சிறு வியாபாரிகள் பாதிக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# வல்வில் ஓரி - குணாளன் நாடாருக்கு திருவுருவச் சிலைகள்!

## அரசு பரிசீலிக்கும்! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவிப்பு!

சென்னை, பிப்.25

**கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி, சுதந்திரப் போராட்டத் தியாகி குணாளன் நாடார் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் அமைக்க வேண்டுமெனும் கோரிக்கை குறித்து முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மு.பெ. சாமிநாதன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:–

**ம.சிந்தனைச் செல்வன்:** தமிழக வரலாற்றில் ஒரு தவிர்க்க இயலாத பேராளுமை



யாக எழுந்து நிற்பவர் ஆபிரகாம் பண்டிதர். அவர் பிறந்தது நெல்லையாயினும், இசை மேதையாய் மலர்ந்தது தஞ்சை என்பதை நாடறியும். கர்நாடக இசை அறிவியலை ஆய்வு செய்து, 'கருணா அமிர்தசாகரம்' எனும் புகழ்பெற்ற ஆய்வு நூலை தமிழகத்திற்கு தந்தவர் அவர். அவரது பெயரால் தஞ்சையிலே ஒரு மணிமண்டபமும், தென் திசையில் ஒரு இசைப் பல்கலைக்கழகமும் வேண்டுமென்கிற மக்களின் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்குமா?

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** உறுப்பினர், ஏற்கெனவே, எழுத்துப்பூர்வமாக இது குறித்து கொடுத்திருக்கிறார். எதிர்காலத்தில் இதுபோன்ற கோரிக்கைகளை யெல்லாம், நிச்சயமாக வருகின்ற தேர்தலுக்குப் பிறகு, முதலமைச்சர் அவர்களின் அரசில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலித்து, அதையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும்.

ஈரோடு (கிழக்கு) தொகுதியினுடைய சட்டமன்றத் உறுப்பினரும் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். வல்வில் ஓரி, சுதந்திர போராட்ட வீரர் குணாளன் நாடார் ஆகியோருக்கு சிலை வைப்பது குறித்து. ஏற்கெனவே நானும், நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும், இரண்டு சிலை சம்பந்தமாகவும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, இரண்டு நாட்களுக்கு முன்பு கடிதமாகக் கொடுத்திருக்கிறோம். அது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு. பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.

### முதல்வர் பிறந்தநாள்: ஏ.ஜெ.பவுல் ஏற்பாட்டில் என்.இ.கே.மூர்த்தி முன்னிலையில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாபெரும் நலத்திட்டம் வழங்கும் விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

*திருவள்ளூர் பிப் 25:-*

*கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி திருவேற்காடு நகர் 7 வார்டு திமுக சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே.பவுல் ஏற்பாட்டில் கீழ் அயனபாக்கத்தில் நடைபெற்றது*

*நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி அனைவரும் வரவேற்றார்*

*பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர் நிர்வாகிகள் சி.தெய்வசிகாமணி, ருக்மணி பவுல், ஐ.ஜேக்கப், செல்லதுரை, இ.முருகன், எம்.ராம்பாபு, தாமோதரன், பரமசிவம், எம்.மூர்த்தி கோ.மூர்த்தி, பா.விஜயசாரதி .சுந்தரவேல், செந்தில்குமார், இரா.வெங்கடேசன், வெங்கிட்டு,தியாகராஜன், உமாமுருகன் பா.இன்பசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பொதுமக்களுக்கு அரிசி, புடவை, கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*அப்போது அவர் பேசியதாவது: பெண்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதற்காக சொத்தில் சம உரிமை என்பது திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா கூட பெண்கள் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளன. விடியல் பயணத்தில் இரண்டு கோடியே 16 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதலமைச்சர் செயல் படுத்தி வருகிறார். பெண்களுக்காகவே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்த வருகிறார். மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்கள் மற்றும் கடன் தள்ளுபடி வழங்கியுள்ளார். மகளிர் விடியல் பயணத்தில் 850 கோடி முறை பயணித்துள்ளனர். மகளிர் உரிமைத் தொகை 3 ஆயிரம் மற்றும் 2 மாதங்களுக்கு கோடை உதவித்தொகை சேர்த்து ஐந்தாயிரம் வழங்கியுள்ளார்.*

*கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகை, காலை உணவு திட்டம் என பெண்களுக்கும் கல்விக்கும் ஏராளமான திட்டங்கள் திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.*

*இந்தியாவில் எந்த மாநில முதல்வரும் செய்யாத சாதனைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மக்களுக்காக செய்து வருகிறார்.*

*அனைத்து அதிகாரங்களை வைத்து கொண்டு ஒன்றிய அரசு மாநில அரசுகளை மதிப்பதில்லை. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக மத்திய அரசு இருக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்து வலியுறுத்தி வருகிறார்.*

*பாஜகவுக்கு ஆதரவாக மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அள்ளிக் கொடுக்கிறார்கள். பாஜக இல்லாத மாநிலங்களுக்கு நிதி தருவதற்கு மறுக்கிறார்கள். இதற்காகத்தான் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதை திமுக வலியுறுத்துகிறது. வரும் தேர்தலில் மீண்டும் திமுக வெற்றி பெற்று முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் மீண்டும் தொடர்வதற்கு நாம் அனைவரும் ஆதரவு தர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.*

*முன்னதாக ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு இங்கு இருந்து கீழ் அயனம்பாக்கம் பகுதியில் ரூ.13.50 மதிப்பில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையை அமைச்சர் நாசர் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜே.ரமேஷ், பா. நரேஷ் குமார், நகர நிர்வாகிகள், நடராஜ், ஜெ.சரவணன், என்.ராஜ், அப்பு(எ) ஜெபராஜ், வார்டு செயலாளர்கள் நகர் மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் வார்டு செயலாளர் மா. விநாயகம், ப.சக்ரவர்த்தி, ஆகியோர் நன்றி கூறினார்கள்*

# அண்ணாநகர் 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

*சென்னை, பிப். 25 -*

*அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, இன்று (25.02.2026 - புதன் கிழமை) மாலை 6 மணிக்கு, எண். 13/38, திருவள்ளுவர் நகர், அண்ணாநகர் கிழக்கில் நடைபெறுகிறது.*

*101வது வட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.முரளிகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.*

*இக்கூட்டத்தில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணைச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:-*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா,*

*மார்ச் 9 தேதி திருச்சியில் நடைபெறும் மாநாடு மற்றும் கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*





சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதியில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.நிஷா சையத் ஏற்பாட்டில் வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா, கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், ரத்னா லோகேஸ்வரன், உ.துரைராஜ், சசிகுமார், பூக்கடை பழனிச்சாமி, அ.கதிரேசன், செழியன், செந்தில்குமார், பி.கே.குமார், சதீஷ் கண்ணன், ஜம்பு முருகன், சுதா, பட்டம்மாள் மற்றும் கழக முன்னோடிகள், மகளிர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மார்ச் 1ம் தேதி முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் சார்பில் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஆலோசனை வழங்கினார்!

*திருவள்ளூர் பிப் 25;-*

*திருவள்ளூர் மத்திய மாவட்டம்பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆகிருஷ்ணசாமி ஆகியோர் ஆலோசனையின் பேரில் சென்னீர்குப்பத்தில் உள்ள ஒன்றிய திமுக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் அண்ணாமலை தலைமை தாங்கினார். பொதுக் குழு உறுப்பினர் குமார். ஒன்றிய நிர்வாகிகள் ஜனார்த்தன், புகழேந்தி, ஏ.ஆர். பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பிரகாஷ், கே.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளை செயலாளர் ரமேஷ் வரவேற்புரை ஆற்றினார்.*

*ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் பல்வேறு ஆலோசனை வழங்கினார். இதில், வரும் மார்ச் 1ம் தேதி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஒவ்வொரு கிளைகள் தோறும் ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது. வரும் மார்ச் 8ம்*

*தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் என்ற தலைப்பில் வீடு, வீடாக பரப்புரை மேற்கொள்வது, திருச்சியில் மார்ச் 9ம் தேதி நடைபெற உள்ள 'ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்' மாநில மாநாட்டில் பெருந்திரளாக கலந்துகொள்வது குறித்தும் ஆலோசனைகள் நடத்தப்பட்டது.*

*இதில், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் என். சண்முகம், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு. டி.திருமலைராஜ், கே.ஜி.ஆர். ஸ்டாலின், கேசவன், பாலா, சுமதிஅத்தியகிரி, பவானி, திருலோகசுந்தர், வெங்கடேசன், ஜி.டி. அருண். துவாரகேஷ், லிங்கேஷ்குமார், ஸ்ரீதர் உள்பட பலர் கலந்து கொண்டனர் முடிவில், கிளைச் செயலாளர் தாமோதரன் நன்றி கூறினார்.*



வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிமிடெட் சார்பில் இராயபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ. 57.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட, மூன்று நியாயவிலை கடைகளை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தார். நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் செந்தில்குமார், மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்டச் செயலாளர்கள் கண்ணன், புகழேந்தி, கொரியர் முருகன், எம்.எல்.ரவி மற்றும் ஜெயபாலன், சேகர், சுந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், மாநகராட்சிப் பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் "THE BYSTANDER ACTION – பார்வையாளர் தலையீடு குறித்த பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா தலைமையில் நேற்று (24.02.2026) வள்ளுவர் கோட்டம், அன்னை தெரசா வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், தகவல் தொடர்பு நிபுணர் திருமதி கிருத்திகா, செல்வி ஹம்சினி, செல்வி பூங்குழலி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.